தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில், பாடி, சென்னை–50.

## வேலைவாய்ப்பு விண்ணப்பம் கோரும் அறிவிப்பு

நாள்: 07.10.2020

இத்திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்காணும் பணியிடங்களுக்கு இந்து மதத்தைச்சார்ந்த தகுதியான நபர்களிடமிருந்து வயது, கல்வித்தகுதி முன்அனுபவம் போன்ற (BIO-DATA) விவரங்கள்அடங்கிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் செயல்அலுவலர், அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில், பாடி, சென்னை–50 என்ற விலாசத்திற்கு 07.11.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத்தபால் மூலமாகவோ, நேரிலோ வந்து சேர்ப்பிக்கவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இந்த தேதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடங்கள் எண்ணிக்கை | சம்பள விகிதம் ரூ. | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | எழுத்தர் | 1 | 4100–10000<br>G-P. ரூ.1250 | 1. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>2. திருக்கோயில் பழக்க வழக்கங்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.<br>3. நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும். |
| 2. | ஓதுவார் | 1 | 3300–9900<br>G-P. ரூ.1250 | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்<br>2. சமய நிறுவனங்கள் (அ) அரசுசார்ந்த நிறுவனங்கள் (அ) பிற நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் தேவாரபாட சாலையில் 3 ஆண்டுகள் படிப்பினை முடித்து தேர்ச்சி பெற்று அதற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>3. தேவாரம் திருவாசகம் மற்றும் திருமுறைகள் ஓதும் திறன் பெற்றிருக்க வேண்டும்.<br>4. நல்ல குரல்வளம் இருத்தல் வேண்டும். |
| 3. | இரவு காவலர் | 1 | 2800–8400<br>G-P. ரூ.1200 | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>2. நல்ல திடகார்த்தமானவராக இருத்தல் வேண்டும்.<br>3. லாகிரி வஸ்த்துகள் பயன்படுத்துபவராக இருக்கக் கூடாது. |

**வயது – வ.எண். 1 முதல் 3 வரை:** 01.07.2020 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்கவேண்டும். அதிகபட்சமாக 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை இத்திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் வந்து ரூ.50/– பணம் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும். பெறப்பட்ட மாதிரி விண்ணப்ப படிவத்தில் கண்டுள்ளவாறு உரியவிவரங்களை பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களை அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்களின் சான்றொப்பத்துடன் (நகல்) இணைத்து விண்ணப்பங்களை செயல்அலுவலர் அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில், பாடி,சென்னை–50, என்ற முகவரிக்கு 07.11.2020–ம் நாள் மாலை 5.45 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பிற்கு முன்னர் வரப்பட்ட விண்ணப்பங்களும், 07.11.2020–ம் நாள் மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும், மாதிரி படிவத்தில் கண்டுள்ளவாறு தேவையான விவரங்கள் மற்றும் இணைப்புகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்களும், மாதிரி படிவத்தின்படி இல்லாமல், வேறுவகையில் உருவாக்கப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். இதர விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் திருக்கோயில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

**பி.எஸ். சண்முக சுந்தரம்**
பரம்பரை அறங்காவலர்

செ.ம.தொ.இ/875/வரைகலை/2020

**அ. குமரேசன்**
செயல் அலுவலர்